**ஏப்ரல் – 29**


# TNPSC துளிகள்

- ❖ இலண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் அரசுத் தலைவர்கள் சந்திப்பின் (Commonwealth Heads of Government Meeting-CHOGM) இறுதியில் காமன்வெல்த் நாடுகள் 2020-ல் இணைய பாதுகாப்பு மீது செயல் நடவடிக்கைகளை மேற்கொள்ள காமன்வெல்த் சைபர் பிரகடனத்தை (Commonwealth Cyber Declaration) இயற்றியுள்ளன. இந்தப் பிரகடனமானது சைபர் பாதுகாப்பு ஒத்துழைப்பின் மீதான உலகின் மிகப்பெரிய மற்றும் புவியியல் ரீதியில் மிகவும் பன்மைத்துவமுடைய உலகின் பல்வேறு அரசுகளுக்கிடையேயான அர்ப்பணிப்பாக (inter-governmental commitment) கருதப்படுகின்றது.
- ❖ சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் (Sichuan province) ஆராய்ச்சியாளர்கள் 11.15 செ.மீ. அளவில் இறக்கையைக் (wingspan) கொண்ட மிகப்பெரிய கொசுவை கண்டுபிடித்துள்ளனர். இது உலகின் மிகப்பெரிய கொசு இனமான ஹோராலோருசியாமிகடோ (Holorusiamikado) இனத்தைச் சேர்ந்தது. இந்த கொசு இனமானது முதன்முதலில் ஜப்பானில் கண்டறியப்பட்டது. பொதுவாக இவை 8 செ.மீ. வரை இறக்கை அளவை கொண்டவை. இந்த கொசுக்கள் தாவரங்களின் தேன்களை (nectar) முக்கிய உணவாக உட்கொள்பவை. இவை இரத்தத்தை உறிஞ்சுவன அல்ல.

# தேசியச் செய்திகள்

## குழந்தைகளை பலாத்காரம் செய்வோருக்கு மரண தண்டனை

- ❖ 12 வயதிற்குக் குறைவான சிறுமிகளை பலாத்காரம் செய்வோருக்கு மரண தண்டனை வழங்குவதற்கான குற்றவியல் சட்ட திருத்தத்திற்கான அவசரச் சட்டத்திற்கானப் பிரகடனத்திற்கு (Criminal Law (Amendment) Ordinance) மத்திய கேபினேட் அனுமதி அளித்துள்ளது.




- ❖ இந்த அவசரச் சட்டமானது இந்திய தண்டனைச் சட்டத்தையும் (Indian Penal Code -IPC),

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தையும் (Criminal Procedure Code-CrPC), 2012 ஆம் ஆண்டின் பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டத்தையும் (Protection of Children from Sexual Offences - POCSO Act 2012), 1872 ஆம் ஆண்டின் இந்திய சாட்சிச் சட்டத்தையும் (Indian Evidence Act) திருத்தம் செய்ய உள்ளது.

- மேலும் இந்த குற்றவியல் சட்டத் திருத்தத்திற்கான அவசரச் சட்டம் தேசிய குற்றவியல் ஆவணக் காப்பகத்தின் (National Crime Records Bureau -NCRB) மூலம் பாலியல் குற்றவாளிகளின் சுய விவரங்கள் (profile) மற்றும் தேசிய பாலியல் பலாத்கார நிகழ்வுகளின் தரவுத் தளங்களை (National database) பராமரிப்பதற்கான சட்டக் கூறினையும் கொண்டுள்ளது.
- காவல்துறை அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் பாலியல் பலாத்கார வழக்குகளின் விசாரணை, வழக்கு பின்தொடரல் மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றிற்காக இத்தரவுகளானது மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் தொடர்ந்து பகிரப்படும்.

## நீதிபதி ராஜேஷ் பிந்தல் குழுவின் பரிந்துரைகள்

- நீதிபதி ராஜேஷ் பிந்தல் (Justice Rajesh Bindal) தலைமையிலான குழு நாடுகளுக்கிடையேயான குழந்தைகளின் தக்கவைப்பு மற்றும் அனுப்புகை (inter country removal & retention of children) தொடர்பான சட்ட விவகாரங்கள் மீது தன்னுடைய அறிக்கையையும், அவை தொடர்பான தன்னுடைய பரிந்துரைகளையும் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு அமைச்சகத்திடம் (Ministry of Women and Child Development) சமர்ப்பித்துள்ளது.
- இந்த குழுவானது நாடுகளுக்கிடையேயான பெற்றோர் சார்ந்த குழந்தைகள் கடத்துதல் பிரச்சினைகள் தீர்மான ஆணையத்தை (Inter Country Parental Child Removal Disputes Resolution Authority-ICPCRDRA) அமைக்கவும் மத்திய அரசிற்கு பரிந்துரை வழங்கியுள்ளது.
- இந்த ஆணையத்தின் தலைவராக ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி இருப்பார். முக்கிய அமைச்சகங்களின் பிரதிநிதிகளும், சட்டம் மற்றும் சமூகத் துறையில் ஈடுபாட்டுப் பின்னணிகளை கொண்டவர்களும் இந்த ஆணையத்தில் உறுப்பினர்கள் ஆவார்.
- பெற்றோர் சார்ந்த பிரச்சினைகளினால் உண்டாகும் குழந்தைகளின் நாடுகளுக்கிடையேயான தடுப்பு மற்றும் நாடுகடத்துதல் பிரச்சினைகளுக்கு ஓர் இடத்தில் தீர்வு வழங்குவதற்காக (one window solution) இந்த ஆணையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த பரிந்துரைகளோடு இணைந்து ராஜேஷ் பிந்தல் குழுவானது சர்வதேச குழந்தைகள் கடத்தல் மசோதாவின் வரைவுச் சட்டத்தை (draft legislation- International Child Abduction bill) மத்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளது.
- தற்போது நடப்பில் குழந்தைகளை இந்தியாவிலிருந்தோ அல்லது இந்தியாவிற்கோ வெளிநாடுகளில் உள்ள இந்தியப் பெற்றோர்களால் உண்டாகும் பிரச்சினைகளிலிருந்து விடுவித்து இந்தியாவிற்கு நாடு கடத்தி கொண்டு வருவது தொடர்பானப் பிரச்சினைகளைத் தீர்க்க எந்தவொரு குறிப்பிடத்தகு சட்டமும் இல்லை.

### *நாடுகளுக்கிடையேயான குழந்தைகள் கடத்தல்-ஹேக் உடன்படிக்கை*

- இந்த சட்ட ஆணையமானது (Law Commission of India - LCI) 1980-ஆம் ஆண்டு சர்வதேச

குழந்தைகள் கடத்தலின் சமூக அம்சங்கள் மீதான ஹேக் உடன்படிக்கையில் (Hague Convention on Civil Aspects of International Child Abduction 1980) இந்தியாவின் இணைவிற்கு ஆதரவளிக்கவும், இந்தியாவின் இணைவு தொடர்பான பிரச்சினைகளை களையவும், சர்வதேச குழந்தைகள் கடத்தலின் சமூக அம்சங்கள்- 2016 (The Civil Aspects of International Child Abduction Bill, 2016) எனும் வரைவுச் சட்டத்தை தயார் செய்துள்ளது.

- சர்வதேச குழந்தைகள் கடத்தலின் சமூக அம்சங்கள் மீதான ஹேக் உடன்படிக்கையில் 94 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர்.
- இந்தியா இந்த ஒப்பந்தத்தில் இன்னும் கையெழுத்திடவில்லை.
- இந்த உடன்படிக்கையில் உறுப்பினராவதற்கு முன்பு உடன்படிக்கையில் கையெழுத்திட முனையும் நாடானது குழந்தைகளின் சர்வதேச கடத்தல் தொடர்பாக உள்நாட்டுச் சட்டத்தை கொண்டிருக்க வேண்டும்.
- இந்த ஹேக் உடன்படிக்கையின் உறுப்பு நாடுகளில் ஏதாவது ஒரு நாட்டில் வாழ்விட குடியிருப்போராய் (habitual resident) உள்ள 16 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் இந்த உடன்படிக்கை பொருந்தும்.

## வைரஸ் கல்லீரல் அழற்சி தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கான ஒருங்கிணைந்த தொடக்கம்

- வைரஸ் கல்லீரல் அழற்சியின் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல வாழ்வு அமைச்சகமானது தேசிய சுகாதாரத் திட்டத்தின் (National Health Mission -NHM) கீழ் “வைரஸ் கல்லீரல் அழற்சியின் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கான ஒருங்கிணைந்த தொடக்கத்தை” (‘Integrated initiative for prevention & control of viral hepatitis’) தொடங்க முடிவு செய்துள்ளது.




- கல்லீரல் அழற்சி என்பது கல்லீரல் வீக்கமாகும். கல்லீரல் அழற்சி என்பது பெரும்பாலும் வைரஸினால் ஏற்படுகின்றது. கல்லீரல் அழற்சியில் பொதுவாக 5 வகைகள் உள்ளன. அவையாவன ஹெப்படைடிஸ் A, ஹெப்படைடிஸ் B, ஹெப்படைடிஸ் C, ஹெப்படைடிஸ் D, ஹெப்படைடிஸ் E ஆகியவை ஆகும்.
- வைரஸ் ஹெப்படைடிஸ் நோயானது உலகம் முழுவதும் ஓர் பொது சுகாதாரப் பிரச்சினையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தியா 2030-ஆம் ஆண்டிற்குள் கல்லீரல் அழற்சியை முற்றிலும் ஒழிக்க இலக்கினை நிர்ணயித்துள்ளது.

## தடைசெய்யப்பட்ட பகுதிகளின் அனுமதி

- தடை செய்யப்பட்ட பகுதிகளுக்கான சிறப்பு அனுமதியுடன் (protected area permit) 2018-ஆம் ஆண்டின் ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் ஐந்தாண்டு காலத்திற்கு நாகாலாந்து, மிசோரம், மணிப்பூர் ஆகிய மாநிலங்களின் எல்லைப் பகுதிகளுக்கு வெளிநாட்டினர்

செல்வதற்கு அனுமதிப்பதற்காக அறுபது ஆண்டுகாலம் பழமையான தடை செய்யப்பட்ட பகுதிகள் அனுமதி விதிகளை (protected area permit regime) மத்திய உள்துறை அமைச்சகம் தளர்த்தியுள்ளது.

- இருப்பினும் மணிப்பூர், மிசோரம், நாகாலாந்து உட்பட அனைத்து தடை செய்யப்பட்ட பகுதிகளுக்கும் (area permit regime) பாகிஸ்தான், சீனா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த குடிமக்கள் செல்வதற்கான தடை தொடர்ந்து நீடிக்கின்றது.
- 1958-ஆம் ஆண்டின் வெளிநாட்டவர்கள் [பாதுகாக்கப்பட்ட பகுதிகள்] ஆணையின் படி (Foreigners (Protected Areas) Order, 1958), சில மாநிலங்களின் உட்புற எல்லைக்கும் (Inner line), சர்வதேச எல்லைக்கும் இடையில் இருக்கும் அனைத்து பகுதிகளும் தடை செய்யப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- தற்சமயம், தடை செய்யப்பட்ட பகுதிகள் அருணாச்சலப் பிரதேசம், மிசோரம், மணிப்பூர், நாகாலாந்து மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்கள் முழுமையாகவும், இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட், ராஜஸ்தான், மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் சில பகுதிகளிலும் உள்ளன.
- சிக்கிமின் சில பகுதிகள் தடை செய்யப்பட்ட பகுதிகள் பகுதி விதிமுறையின் (protected area regime) கீழும் சில பகுதிகள் கட்டுப்படுத்தப்பட்ட பகுதி விதிமுறையின் (restricted area regime) கீழும் வருகின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## டையூ பொலிவுறு நகரம்

- டையூ பொலிவுறு நகரமானது (Diu Smart City) பகல் வேளைகளில் 100 சதவீதம் புதுப்பிக்கக் கூடிய ஆற்றலில் இயங்குகின்ற இந்தியாவின் முதல் நகரமாக உருவாகியுள்ளது.
- கடந்த ஆண்டு வரை டையூ நகரமானது தன்னுடைய மின்னாற்றல் தேவையில் 73 சதவீதத்தினை குஜராத்திலிருந்து இறக்குமதி செய்து வந்தது.
- இந்த புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் தொடக்கத்தின் மூலம், டையூ நகரமானது ஆண்டுதோறும் 13,000 டன் கார்பன் உமிழ்வை குறைக்க உள்ளது.
- இதன் மூலம் டையூ நகரமானது பிற நகரங்களுக்கு தூய மற்றும் பசுமையான நகரங்களாக உருவாக புதிய அளவுகோல்களை (benchmark) ஏற்படுத்தியுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## அடிலாபட் டோக்ரா, வாரங்கல் துர்ரிக்கள் - புவிசார் குறியீடு

- சென்னையில் உள்ள புவிசார் குறியீட்டு பதிவு அலுவலகமானது (Geographical Indication Registry) அடிலாபட் டோக்ரா (Adilabad dokra) மற்றும் வாரங்கல் துர்ரிகள் (Warangal Dhurries) ஆகிய தெலுங்கானாவைச் சேர்ந்த இரு கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீட்டினை (Geographical Indication- GI) வழங்கியுள்ளது.
- தெலுங்கானாவின் அடிலாபாத் மாவட்டத்தை பூர்வீக இடமாக கொண்ட வோஜ் சமுதாயத்தினரால் (Woj community) மேற்கொள்ளப்படும் ஓர் பண்டைய உலோக

மணியின் கைவினை வடிவமே (Ancient bell metal craft) அடிலாபட் டோக்ரா ஆகும்.

- இவர்கள் சிரோ பெர்டியூ (cire perdue) எனும் பண்டைய வார்ப்பு தொழில்நுட்பத்தை (ancient casting technique) பயன்படுத்துகின்றனர். அதாவது உலோக வார்ப்பிற்கு பின்னான மெழுகு நீக்கத் தொழில்நுட்பம் (lost wax casting technique).



- வாரங்கல் துர்ரிகள் என்பவை மிகவும் பிரபலமான பாரம்பரிய தடித்த பருத்தி கம்பளிகளாகும் (cotton rug). இவற்றில் நெசவாளர்கள் அழகிய வடிவமைப்புகளை உருவாக்குவர். மேலும் தாவர எண்ணெய்களைப் பயன்படுத்தி இவற்றை சாயமிடுவர். இவற்றின் மீதான அச்சுப் பணி முடிந்த பிறகு இவற்றை ஓடும் நீரில் கழுவுவர்.

## சோதனை மாதிரி நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை தீர்வை

- பெங்களூரு நகரத்தில் போக்குவரத்து மேலாண்மையை (traffic management) அதிகரிப்பதற்காக எலெக்ட்ரானிக்ஸ் சிட்டி டவுன்ஷிப் ஆணையத்துடன் (Electronics City Township Authority-ELCITA) கூட்டிணைந்து நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை தீர்வையின் சோதனை மாதிரியை (prototype of intelligent traffic management solution) பெங்களூரு நகரம் சோதனை செய்துள்ளது.
- பெங்களூரு நகரத்தின் போக்குவரத்து தொடர்பான தகவல்களை நகரத்தின் போக்குவரத்து மேலாண்மை அதிகாரிகளுக்கு வழங்குவதும், பயணிகள் போக்குவரத்தின் மேலாண்மையை அதிகரிக்க உதவுவதும் இந்த தீர்வையின் நோக்கங்களாகும்.
- இந்த தீர்வையானது பல்வேறு வீடியோ கேமிராக்கள் மூலம் போக்குவரத்து காட்சிகளை காணொளி பதிவு செய்தல் மற்றும் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தி அவற்றை செயல்முறைப்படுத்துதல் (processing using artificial intelligence) போன்றவற்றை உள்ளடக்கியது.
- வாகனங்களை கண்டறிதல், போக்குவரத்து நெரிசல் மதிப்பீடு மற்றும் உண்மை நேர செயல்திறனுக்காக போக்குவரத்து டிராபிக் விளக்குகளை கட்டுப்படுத்துதல் போன்ற போக்குவரத்து மேலாண்மை பணிகளின் தானியங்கலுக்கு (Automation) இந்த தீர்வை உதவும்.

- - - - - - - - - - - - - - -